பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභා සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
Provincial Council Complex , A9 Road, Kaithady

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: - NP/09/A&P/04/12/CIR/2025 **.18..11.2025**

மாகாண நிதிச் சுற்றறிக்கை இல : - **PF/AP/ 02/2025**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

மாகாண நிதி ஒழுங்குவிதி 254 இன் கீழ் 2025 ஆம் ஆண்டுக்காக கணக்கு புத்தகங்களை மூடுதல் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், மாகாணசபையின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து இரண்டு (02) மாதங்களைத்தாண்ட முன்னர் வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு அதில் உள்ளடங்கியுள்ள தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிக்காக தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் நிதியங்கள் ஒதுக்கப்படுகின்ற சகல செலவின தலைப்புக்களும் தமது (வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு நடவடிக்கைக்குரிய கணக்குகள் உட்பட) வருடாந்த நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது கணக்காய்விற்காக போதுமானளவு காலத்தை வழங்க கூடிய விதத்தில் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களை உரிய கால எல்லைக்குள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும். அதனால் சகல செலவினத் தலைப்புக்களினதும் 2025 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமரப்பிக்கக்கூடிய விதத்தில் 2025 ஆம் நிதியாண்டிற்கான பின்வரும் கணக்குகளை மூடும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும், நிதி ஒழுங்குவிதிகள் 150 இன் பிரகாரம், திரண்ட நிதியத்தின் மூலம் செலவினங்களை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் அந்த நிதி ஒழுங்கு விதியின் தேவைப்பாடுகளையும் உள்ளடக்க கூடிய விதத்தில் நிதிக் கூற்று தொகுதியை தயாரித்தல் வேண்டும். அவ்வாறு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குரிய அறிவுரைகளும் மாதிரிப் படிவமும் மாகாணத் திறைசேரியினால் பின்னர் வெளியிடப்படும்.

மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 254 இன் பிரகாரம், 2025 ஆம் நிதியாண்டின் கணக்கு புத்தகங்களை 2025 மார்கழி 31 ஆம் திகதியன்று மூட வேண்டிய அதேவேளையில், தொடர்புடைய ஆண்டிற்குரிய கணக்கு சுருக்கங்கள், மாற்றல் கட்டளைகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் என்பவற்றை சரியாகவும் முறையாகவும் இந்த வழிகாட்டியின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / ක්‍රමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப்பயிற்சி / පිරිස්පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

அல்லது அதற்கு முன்னர் பிரதிப்பிரதம செயலாளர் - நிதி, மாகாணத் திறைசேரி அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

மேற்படி விடயம் தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 01/2025 இற்கு அமைய பின்வரும் விடயங்கள் மீது தங்களுடைய கவனம் ஈர்க்கப்படுகின்றது.

1. **31.12.2025 இல் காசுப்புத்தகத்தினை மூடுதல்.**

2025 ஆம் ஆண்டுக்கான காசுப்புத்தகமானது பின்வருமாறு மூடப்படுதல் வேண்டும்.

1.1.

(அ) மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், விசேட செலவின அலகுகளின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் தங்களது அலுவலகங்களில் மற்றும் உபஅலுவலகங்களில் பேணப்படும் காசுப் புத்தகத்தினை மூடுவதற்கான அதிகாரத்தினை குறித்த பொறுப்புவாய்ந்த பதவி நிலை அலுவலர் ஒருவருக்கு பெயர் குறித்தொதுக்கி அவ் அதிகார கையளிப்பின் பிரதி ஒன்றினை வடமாகாண உதவிக் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) 2025 ஆம் ஆண்டுக்கான நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் இறுதியாக்கப்படுவதுடன் வேறு எந்த நிதிக் கொடுக்கல்வாங்கல்களும் அதன் பிறகு மேற்கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் காசுப்புத்தகம் மேலும் பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் காசுப்புத்தகமானது 31.12.2025 இல் மூடப்படுவதுடன் அதனை உறுதிப்படுத்திய குறிப்புடன் அவ்அலுவலரது பெயர், பதவிப்பெயர், திகதி மற்றும் நேரம் என்பதனை குறிப்பிடப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு காசேட்டின் இறுதி பதிவின் கீழ் சிவப்புக் கோடிட்டு 31.12.2025 இன் பின்னர் எவ்வித நிதிக்கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறாதிருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

1.2. மாகாண அமைச்சின் செயலாளர்கள், விசேட செலவின அலகுகளின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் தங்கள் அலுவலங்களின் 31.12.2025 இல் உள்ளவாறான காசுப் புத்தக மீதியினை உப அலுவலகங்கள் அற்ற அமைச்சு, திணைக்களங்கள் 01.01.2026 ஆந் திகதியும், உப அலுவலகங்களை கொண்ட திணைக்களங்கள் 05.01.2026 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், **பிரதம செயலாளர், வடமாகாணம்** என்னும் பெயருக்கு காசோலையாக வரைந்து **மாகாணத் திறைசேரி, வடமாகாணம், மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **கட்டுநிதிச் சரிசெய்கைகள்**

2.1. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 31.12.2025 இல் உள்ளவாறான காசுப் புத்தக மீதியினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Annexure I இலக்கத்தை கொண்ட மாதரிப்படிவத்தினை பூர்த்தி செய்து மாகாணத் திறைசேரிக்கு மேலே 1.2 இன் அறிவுறுத்தலில் குறிப்பிட்டவாறு மீதி காசோலையுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

2.2. 2026 ஆம் ஆண்டின் முதல் வேலை நாளில் அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு ஆரம்ப கட்டுநிதி விடுவிக்கப்படும் என்பதனால் எந்தவொரு அமைச்சு அல்லது திணைக்களங்கள் கட்டுநிதியில் எந்தவொரு பகுதியையும் நிறுத்தி வைத்திருக்கக்

கூடாது. ஆண்டின் இறுதியில் காசுப்புத்தக மீதி இருப்பு இல்லாவிட்டாலும் "Nil" அறிக்கை மாகாணத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2.3. மேலே 2.1, 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே 2026 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி மாகாண திறைசேரியினால் அமைச்சு, திணைக்களங்களுக்கு விடுவிக்கப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

2.4. 01.01.2026 அன்று மாகாணத் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்காக உப அலுவலகங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உப கட்டுநிதியினை தீர்ப்பதற்குத் தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும். 31.12.2025 இல் உப அலுவலகங்களிடமிருந்து நிலுவைத் தொகையினை சேகரிக்கும் போது உப அலுவலகங்களுடன் கலந்துரையாடி பந்தி 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதை ஒத்த வசதியான முறையை பின்பற்றவும்.

3. **பொதுவான விடயங்கள்**

3.1. அமைச்சு / திணைக்களத்தின் செலவினத் தலைப்புக்குரிய மாதாந்த கணக்கு விபரங்களை மாகாணத் திறைசேரியினால் வழங்கப்பட்ட கணனிப் பிரதி மூலம் சரிபார்க்கப்படுவதுடன் போதிய ஏற்பாடுகள் இன்றி வாக்குப்பண பேரேட்டில் செலவு விடயங்களுக்கு செய்யப்பட்ட வரவு வைத்தல்கள் உடனடியாக சரி செய்யப்பட வேண்டும்.

3.2. குறைநிரப்பு கணக்குச் சுருக்கத்தின் மூலம் ஏனைய அமைச்சொன்றில் / திணைக்களமொன்றில் கணக்குகளுக்குரிய பதிவுகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அதற்காக குறிப்பிடப்பட்ட அமைச்சு / திணைக்களத்தின் முன்னனுமதியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.3. தொடர்புடைய அமைச்சின் / திணைக்களத்தின் சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அந்தக் கணக்கு குறிப்புக்களை திருத்திக் கொள்வது நடைமுறை சாத்தியமற்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் பிழையான கணக்கு வைப்புக்களை திருத்திக்கொள்வதற்காக மாகாண திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறான சரிசெய்தலுக்காக மாகாணத் திறைசேரிக்கு அனுப்பப்படுகின்ற பேரேட்டுக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும்.

3.4. அமைச்சு / திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான இறுதி திறைசேரி கணக்கு கூற்று மாகாண திறைசேரியினால் கணனி அச்சு வடிவில் வெளியிடப்படும் (Treasury printout). இவ் ஆவணம் மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும். 2025ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக்கூற்றினை உறுதிப்படுத்தப்பட்ட மாகாண திறைசேரிக் கணக்கு கூற்றின் தகவலின்படி மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3.5. 2025 ஆம் ஆண்டில் ஏதேனும் ஒரு அமைச்சு / திணைக்களம் வேறு அரச அல்லது தனியார் நிறுவனத்திடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகளை வாங்கியிருந்தால் தொடர்புடைய பற்றுச்சீட்டுக்களை 31.12.2025 அன்று அல்லது அதற்கு முன்னர் தீர்த்து கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6. மாகாண நிதி ஒழுங்கு விதி 162 இன் படி செலவினத் தலைப்பில் உள்ள ஆண்டிறுதி மீதி ஏற்பாடுகளை வைப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்காக வடக்கு மாகாண பிரதம செயலாளரின் அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தால் மட்டுமே மாற்ற முடியும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட எஞ்சிய ஏற்பாடுகளை மாற்றுவதற்காக மாகாண திறைசேரி 2025 ஆம் ஆண்டுக்கான புதிய வைப்புக் கணக்கு எண்ணை அந்தந்த நிறுவனங்களுக்கு உப கணக்காக ஒதுக்கும். 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் எந்த சூழ்நிலையிலும் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய வைப்புக் கணக்கு அல்லது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்படக்கூடாது. மேற்குறிப்பிடப்பட்ட கோரிக்கையை வடமாகாண திறைசேரிக்கு சமர்ப்பிக்கும் போது உரிய செலவினத் தலைப்பில் போதிய ஏற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

3.7. கணக்குகளைத் தீர்க்கும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சின் / திணைக்களத்தின் புத்தகங்களுக்கும் இறுதி மாகாண திறைசேரி கணக்கறிக்கை 2025 இல் உள்ள தகவல்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

3.8. நிதியல்லாத சொத்துக்களின் கணக்கு ரீதியான சரியான தன்மையைப் பேணிவருவது தொடர்புடைய அமைச்சு / திணைக்களத்தின் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளை நிறுவனத்தின் புத்தகங்களில் உள்ள நிலுவைகள் New CIGAS இல் பதிவேற்றப்படுகின்ற தனிப்பட்ட இருப்புகளுக்கு சமமாக இருக்க வேண்டும்.

3.9. கீழே பந்தி 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்கு அமைவாக மாகாண திறைசேரியின் கணக்கு கூற்றுக்கள் வெளியிடப்படுகின்றமையினால், உரிய கால எல்லைக்குள் இறுதி கணக்கு சுருக்கங்களையும் குறைநிரப்பு கணக்கு சுருக்கங்களையும் சமர்ப்பிப்பது தொடர்புடைய அமைச்சு / திணைக்களங்களின் பொறுப்பாகும். அவ்வாறு உரிய தினத்திற்கு தொடர்படைய கணக்கு சுருக்கங்களையும் ஏனைய கணக்கு அறிக்கைகளையும் சமர்ப்பிக்காத நிறுவனங்களின் செலவுகள் இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்களின் மூலம் வெளிப்படமாட்டாது. அவ்வாறு இறுதி திறைசேரி கணக்குகளின் மூலம் சரியான நிதி நிலைமைகள் வெளிப்படுத்தாமை பற்றி கணக்காய்வு விசாரணைகளுக்கு உட்படுவதனை தவிர்ப்பதற்காக உரிய கால எல்லைக்குள் தமது செலவினத் தலைப்பில் சகல செலவினங்களையும் திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் / கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்தல் வேண்டும்.

4. 2025 ஆம் நிதியாண்டின் கணக்குகளைத் தீர்க்கும் பணிக்காக எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களும் அதற்கான இறுதி திகதிகளும்

தொ. இல	விடயம்	பணி தொடர்பான தெளிவுபடுத்தல்கள்	பணியினைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுத்தித் திகதிகள்
4.0	2025 ஆம் ஆண்டிற்குரிய காசுப் புத்தகத்தினை அந்தந்த அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மூடுதல்	வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்	2025 மார்கழி 31 ஆந் திகதியன்று

4.1	காசுப் புத்தகத்தின் மீதித் தொகையினை தீர்த்தல்	இச் சுற்றறிக்கையின் படி மாகாணத் திறைசேரிக்கு தீர்வு செய்யப்பட வேண்டும்	2026 தை 01 ஆந் திகதி மற்றும் 2026 தை 05 ஆந் திகதியன்று
4.2	2025 ஆம் ஆண்டு மார்கழி மாத கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய கணக்கு பொழிப்பினை சமர்ப்பித்தல்	இந்தச் சுற்றறிக்கையின் படி கணக்கு பொழிப்பினை சமர்ப்பிக்க வேண்டும்	2026 தை 6 ஆந் திகதிக்கு முன்னர்
4.3	2025 மார்கழி மாதத்திற்குரிய திறைசேரி கணக்கு கூற்றினை வெளியிடுதல்	2025 ஆம் ஆண்டு மார்கழி மாத கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய திறைசேரி கணக்கு கூற்று கணனி பிரதி (Treasury printout) மூலம் வழங்கப்படும்	2026 தை 9 ஆந் திகதிக்கு முன்னர்
4.4	முதலாவது குறைநிரப்புக் கணக்கு பொழிப்பினை சமர்ப்பித்தல்	2025 ஆம் ஆண்டின் மார்கழி மாத கணக்குப் பொழிப்பில் உள்ளடக்குவதற்கு முடியாமல் போன கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் உள்ளடக்கி "முதலாவது குறைநிரப்பு கணக்கு பொழிப்பினை" சமர்ப்பித்தல் வேண்டும் இங்கு நிகழ்ச்சித் திட்டத்தின் 2025 ஆம் ஆண்டு மார்கழி மாத இறுதி செயல்முறை பூர்த்தியடைந்த பின்னர் மாத்திரம் முதலாவது குறைநிரப்பு கணக்கு பொழிப்பினை சமர்ப்பித்தல் வேண்டும்.	2026 தை 13 ஆந் திகதிக்கு முன்னர்
4.5	முதலாவது குறைநிரப்புக் கணக்குப் பொழிப்பினை உள்ளடக்கிய முதலாவது குறைநிரப்பு திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களை வெளியிடுதல்.	2025 மார்கழி மாத கணக்கு பொழிப்பினையும் முதலாவது குறை நிரப்பு கணக்கு பொழிப்பில் மேற்கொள்ளப்பட்ட சகல பெறுவனவு, கொடுப்பனவுகளையும் திருத்தம் செய்து உள்ளடக்கிய முதலாவது குறைநிரப்புக் கணக்கு கூற்று, கணனி பிரதி (Treasury printout) மூலம் வழங்கப்படும்	2026 தை 16 ஆந் திகதிக்கு முன்னர்
4.6	2025 ஆம் ஆண்டுக்கான இறுதி திறைசேரி கணக்கு கூற்றினை வெளியிடுதல்	கணக்குகளின் குறைநிரப்பு கணக்கு பொழிப்புகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பின்பு அவ்வாண்டிற்கான இறுதி கணக்கறிக்கையினை வெளியிடல்	2026 தை 20 ஆந் திகதிக்கு முன்னர்
4.7	இணைப்பு II & III இல் காட்டப்பட்டதன் படி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை பற்றிய விபரங்களை வெளியிடுதல்	2025 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்க்கப்பட வேண்டிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் (P.F.R 65(2) P.F.R 65(3)) இற்கமைய குறித்த விபரங்களை சமர்ப்பித்தல், இணைப்பு II & III இல் காட்டப்படாத ஏதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்கள் 2026 இல் தீர்க்கப்படமாட்டாது.	2026 தை 23 ஆந் திகதிக்கு முன்னர்

4.8	இறுதி காலாண்டிற்குரிய பொது வைப்பு இணக்க கூற்று சமர்ப்பித்தல் (2 பிரதிகள்)	மகாண திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	2026 தை 30 ஆந் திகதிக்கு முன்னர்
4.9	நிலையான சொத்து விபரங்களை சமர்ப்பித்தல் (இணைப்பு IV)	CIGAS நிகழ்ச்சித் திட்டத்தினால் அனைத்து நிதியல்ல கொத்துக்களுக்காக தயாரிக்கப்பட்ட சொத்து கோவை (CSV File) ஆனது மாகாண திறைசேரிக்கு கீழ் தரப்பட்ட மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். I. உபகாரியாலயங்கள் காணப்படுமாயின் அவற்றிக்கான தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்ட CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட சொத்து கோவை உருவாக்கப்பட வேண்டும். II. இச்சொத்து கோவையானது மாகாண திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படுவதன் முன் தலைமை காரியாலயங்கள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் கட்டுப்பாட்டு பேரேடு கணக்குகள் மீதிகள் (Cash → Ledger → Show Accounts → Accounts Summary → Assets) CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உருவாக்கப்படும் Final Account Assets Report (Cash → Final Acct → Asset_Rpt_Current Year) ற்கு இணங்க வேண்டும். III. சொத்து கோவையினது உண்மைத்தன்மையினை (I) மற்றும் (II) க்கு இணங்க உறுதிப்படுத்தியதற்கு பின்னரே மாகாண திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். நிதியல்லா சொத்துக்களுக்கான CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட PDF அறிக்கையின் வன்பிரதியை இணைப்பு IV என குறிப்பிட்டு கணக்காளரினால் சான்று உறுதிப்படுத்தப்பட்டு மாகாண திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படடல் வேண்டும்.	2026 மாசி 05 ஆந் திகதிக்கு முன்னர் dcsfassets@gmail.com

4.10	**முற்பண கணக்குகள்** ஊழியர் முற்பண கணக்கு மற்றும் வியாபார முற்பண முயற்சிக் கணக்குகளின் இறுதி காலாண்டு இணக்க கூற்று சமர்ப்பித்தல் (2 பிரதிகள்)	அனைத்து முற்பண கணக்குகளின் மூலப்பிரதிகளையும் மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்	2026 மாசி 05 ஆந் திகதிக்கு முன்னர்
4.11	வருடாந்த நிதிக்கூற்று மற்றும் வருமான கணக்கினை சமர்ப்பித்தல் (4 பிரதிகள்)	மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்	2026 மாசி 12 ஆந் திகதிக்கு முன்னர்
4.12	வியாபார முற்பண முயற்சிக் கணக்குகளின் இறுதி கணக்கறிக்கையினை சமர்ப்பித்தல் (4 பிரதிகள்)	அனைத்து வியாபார முற்பண கணக்குகளின் இறுதி கணக்கு அறிக்கையின் மூலப்பிரதிகளை மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்	2026 மாசி 20 ஆந் திகதிக்கு முன்னர்
4.13	சம்பந்தப்பட்ட அமைச்சு / திணைக்களங்களினால் 2025 ஆம் ஆண்டின் திட்டங்களுக்குரிய (GEMP) காசுப்புத்தகத்தினை மூடுதல்.	இச்சுற்றுநிருபத்தின் பந்தி 1.1 மற்றும் 1.2 அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்பட வேண்டும்.	2025 மார்கழி 23 ஆந் திகதி
4.14	திட்டங்களுக்குரிய காசுப் புத்தகத்தின் மீதித் தொகையினை தீர்த்தல். (GEMP)	இச்சுற்றுநிருபத்தின் பந்தி 1.1 மற்றும் 1.2 அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்பட வேண்டும்.	2025 மார்கழி 26 ஆந் திகதிக்கு முன்னர்
4.15	வாடகை மற்றும் முற்பணக் கணக்கு கூற்று	2025 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்படும் வாடகை மற்றும் முற்பணக் கணக்கு கூற்று இணைப்பு V இன் மாதிரிக்கமைவாக மாகாண திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். CIGAS மென்பொதியின் ஊடாக வழங்கப்பட்ட முற்பணங்களின் மீதிகள் மற்றும் CIGAS மென்பொதியின் ஊடாக வழங்கப்படாத ஏனைய விடயக் குறியீடுகளுக்கான மீதிகள் ஆகியன தனித்தனியான அட்டவணையாக தயாரிக்கப்படல் வேண்டும். CIGAS மென்பொதியின் ஊடாக வழங்கப்பட்ட முற்பண மீதிகள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் Cash → Ledger → Show Account → Account Summary → Advance → Mobilization Advance) மீதியுடன் இணங்க வேண்டும்.	2026 தை 23 ஆந் திகதிக்கு முன்னர்

		CIGAS மென்பொதியின் ஊடாக பெறப்பட்ட அறிக்கையும் கணக்காளரினால் சான்று உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.	
4.16	நிலுவை வருமானம் பற்றிய அறிக்கை	இத்துடன் இணைக்கப்பட்டுள்ள TOD/REV/01(i) மாதிரிக்கமைவான மாகாண திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்	2026 தை 21 ஆந் திகதிக்கு முன்னர

இந்தச் சுற்றறிக்கை தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு மாகாணத் திறைசேரியில் உள்ள பின்வரும் அதிகாரிகளைத் தொடர்புகொள்ளலாம்.

பிரதம கணக்காளர் - கணக்குகளும், கொடுப்பனவுகளும், வ.மா - 021 222 0852
பிரதம கணக்காளர் - பாதீடு, வ.மா - 021 222 0851
பிரதம கணக்காளர் - வருமானம், வ.மா - 021 221 3550
கணக்காளர் - கணக்குகளும், கொடுப்பனவுகளும், வ.மா - 021 221 3540

2025 ஆம் ஆண்டில் கணக்குகளை முடிவுறுத்துவதில் மேற்கூறிய நடைமுறைக்கு இணங்கி கணக்குகளை தயாரிப்பதிலும், நிதிப்பொறுப்புணர்வை அடைந்து கொள்ளவும் உரிய அறிவுறுத்தலினை வழங்கியுதவுமாறு அனைத்துச் செயலாளர்கள், விசேட செலவின அலகுகளின் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வடமாகாணம்.

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம் - கௌரவ ஆளுநரின் தகவலுக்காக
2. செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கொழும்பு- தகவலுக்காக
3. செயலாளர், நிதி ஆணைக்குழு, கொழும்பு - தகவலுக்காக
4. உதவி கணக்காய்வாளர் நாயகம், வடமாகாணம் - தகவலுக்காக
5. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வடமாகாணம் - தகவலுக்காக

Annexure – I

My No: - ……………………..…
Date: - ………………….……

Deputy Chief Secretary – Finance,
Provincial Treasury,
Northern Province,
Provincial Council Complex,
A9 Road,
Kaithady.

Closing of Cash Book as at 31.12.2025 & Remittance of Cash Balance to the Provincial Treasury

Ministry / Department: ……………………………………………………………………………………………

I hereby certify that the Cash Book balance as at 31st December, 2025 of the Ministry / Department is Rs……………………………………………..…………………….. for which a cheque bearing No. …………………………….. dated ……………….. is enclosed herewith. I further certify that there is no **Cash balance to remit to the Provincial Treasury,** other than the amount settled by the above cheque. After the remittance of the above amount the imprest balance tallies / does not tally due to the following reasons :-(Reasons are given as detail)

S. No.	Reason	Amount
	Total	

Forwarding Cash book balance details

S. No.	Reason	Amount
	Block Grant	
	CBG	
	PSDG	
	Special Works	
	GEMP	
	APO	
	Deposit	
	CSR	
	JLI	
	Modernization of Regional Libraries	
	Improvement and renovation of Children's Home and Certified School	
	Total	

……………………………….
Chief Accountant / Accountant /
Head of the Department

Date:- ……………..

Annexure II

Statement of Liabilities and Commitments

Name of Special Expenditure Unit/Ministry/Department:
Expenditure Head No:
Programme No. & Title:

Name of the Person/Institution	Commitment No	Month	Date	Head	Programme	Project	Sub Project	Object Code	Finance Code	Deatails of Item	Commitment	Commitment Balance (Rs)	Liability Date	Liability Amount (Rs)	RevisedLiability	Paid Liability	Liability Balance (Rs)
1. Ministries/Government Department																	
....																	
....																	
Total																	
2. State Corporations/Statutary Boards																	
....																	
....																	
Total																	
3. Others (Private Parties)																	
....																	
....																	
Total																	
Grand Total																	

Nature of payments/Liabilities should be recognized separately as follows.

1. Ministries/Government Departments
2. State Corporations/Statutory Boards
3. Private Parties

Liabilities are transactions of which payments have not been made to the relevant parties, although goods, services or assets and services pertaining to construction contracts have been received during the respective accounting year.

Commitments are contracts or written agreements which have been entered in to with the external parties in order to obtain goods and services during the respective accounting year, although the relevant assets or services have not been received.

Chief Accountant/Accountant
Date :

Annexure III

Statement of Liabilities - (i)

Statement of Commitments in terms of PFR 65 (2) and 65(3)

Name of Ministry / Department :
Expenditure Head No. :
Programme No. & Title :

Name of the Person/Institution	Description of Commitments	Project	Sub Project	Object Code	Financing Code	Maximum Commitment celling in terms of PFR 65(2) Provision (Rs.)	Total Cost Estimate in terms of PFR 65(3) (Rs.)	Commitement & Liability Amount (Rs.)
1. Ministries/Government Department								
....								XX
....								XX
Total								
2. State Corporations/Statutary Boards								
....								XX
....								XX
Total								
3. Others (Private Parties)								
....								XX
....								XX
Total								
Grand Total								

....
Chief Accountant/Accountant
Date :

Annexure V

Northern Provincial Council

Statement of Rent and Work Advance Accounts as at 31st December 2025

Ministry /Department:
Expenditure Head No :

Advance Code Number/Object Code	Project Description	Paid Date	Voucher No.	Paid Amount (Rs.)	Balance as at 01.01.2025 (Rs.)	Recoveries During the Year 2025		Balance as at 31.12.2025 (Rs.)	Expiry Date of Security Bond	Contract Completion Date / Extention Date
						For Previous Year	For Current Year			
(1) Rent Advance 9188-										
Total (a)										
(2) Work Advance 9188-......-0-2-0-.....										
Total (b)				-	-	-	-	-		
Grand Total (a)+(b)				-	-	-	-	-		

....
Chief Accountant / Accountant
Date :

TOD/REV/01(i)

நிலுவை வருமானம் பற்றிய அறிக்கை - 31.12.2025

அமைச்சு / திணைக்களம் :

வருமான வகை	வருமான குறியீடு	நிலுவை வருமானம்					நிலுவைக்கான காரணம்	நிலுவைத் தொகையினை மீள அறவிடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை	நிலுவைத் தொகையினை அறவிடுவதற்குள்ள இயலுமை பற்றிய சான்றிதழ்
		2022.12.31 வரையான நிலுவைத் தொகை	2023ஆம் ஆண்டிற்கான திரட்டிய நிலுவைத் தொகை	2024 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை	2025 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை	31.12.2025 அன்றுள்ளவாறு மொத்த நிலுவைத்தொகை			
1	2	3	4	5	6	7= 3+4+5+6	8	9	10

* நிரல் இல 8 , 9 மற்றும் 10 ஆகியவற்றைப் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும்.

தயாரித்தவர் : ....

சரியானதென உறுதிப்படுத்துகின்றேன்.

....

செயலாளர் / திணைக்கள தலைவர்
(உத்தியோக முத்திரை)

பரீட்சித்தவர் : ....
பிரதம கணக்காளர் / கணக்காளர்

திகதி : ....